# தமிழ்நாடு உள்ளாட்சி அமைப்புகள் முறைமன்ற நடுவம்

எண். 100, அண்ணா சாலை, கிண்டி, சென்னை- 600 032.
தொலைபேசி : 044– 22201337
மின்னஞ்சல் முகவரி : ombudsmanlocal@tn.gov.in

முன்னிலை : மு. மாலிக் பெரோஸ் கான், இ.ஆ.ப., (ஓ)
தமிழ்நாடு உள்ளாட்சி அமைப்புகள் முறைமன்ற நடுவர்

**ஆணை எண் : 110/மா/2023**

**நாள் : 27.05.2023**

திருமதி. சோபா பழனிவேலு,
ஈரோடு – முறையீட்டு மனுதாரர்

ஆணையர், தஞ்சாவூர் மாநகராட்சி,
தஞ்சாவூர். – எதிர்மனுதாரர்

ஈரோடு, இரயில்வே காலனி, கதவு எண். 300 என்கிற முகவரியில் வசிக்கும் திருமதி. சோபா பழனிவேலு அவர்களின் 12.04.2023 நாளிட்ட மனு 13.04.2023 அன்று இம்முறைமன்ற நடுவத்தில் பெறப்பட்டு, 110/மா/2023 என்ற எண்ணிட்ட முறையீட்டு மனுவாகப் பதிவு செய்யப்பட்டது. மனுதாரரின் முறையீட்டு மனு பரிசீலனை செய்யப்பட்டு, கீழ்க்காணும் ஆணை வெளியிடப்படுகிறது.

## ஆணை

ஈரோடு, இரயில்வே காலனி, கதவு எண். 300 என்கிற முகவரியில் வசிக்கும் திருமதி. சோபா பழனிவேலு அவர்கள் தனது 12.04.2023 நாளிட்ட மனுவில் கீழ்காணும் புகார்களை தெரிவித்துள்ளார்.

" தஞ்சாவூர் மாநகராட்சி எல்லைக்குட்பட்ட 42வது வார்டு ராஜப்பா நகரில் உள்ள செங்கமலநாச்சியம்மன் கோவில் தெருவில் உள்ள கதவு எண்.7 லேட் S.R.ராமச்சந்திரன் பிள்ளை செங்கமலநாச்சியம்மன் கோவிலுக்கு சொந்தமான கோவில் இடத்தில் வீடுகட்டி மேற்கூரை வேய்ந்து நாற்பது ஆண்டுகள் முறையாக கோவில் அடிநிலத்திற்கு வரிகள் செலுத்தி மாநகராட்சிக்கு மேற்கூரை வீட்டுவரி, குடிநீர் இணைப்பு கட்டணம், பாதாள சாக்கடை, இணைப்பு கட்டணம் ஆகியவை செலுத்தி எனது தந்தைக்குப்பின் 2022–2023 ஆண்டு வரை வரி செலுத்தி உள்ளேன். எனது தந்தைக்குப் பின் சோபா பழனிவேலு சுவாதீன அனுபவத்தில் உள்ள வீட்டை நகராட்சி அதிகாரிகள் எந்தவித முன் அறிவிப்பு தகவல் அளிக்காமல் இடித்து விட்டனர். என் வீட்டில் உள்ள பொருள்களும் திருடப்பட்டன. என் வீட்டையும் தரைமட்டமாக இடித்து விட்டனர் ஆகவே சமூகம் விசாரணை செய்து இடிக்க உத்தரவு இட்ட அதிகாரி மேல் வழக்கு பதிவு செய்யுமாறு மிகவும் தாழ்மையுடன் கேட்டுக்கொள்கிறேன்" என தெரிவித்துள்ளார்.

**2) மேற்கண்ட புகார் மனுவின் மீதான அறிக்கையை அனுப்புமாறு, இம்முறைமன்ற நடுவ 04.05.2023 நாளிட்ட அறிவிப்பு மூலம் தஞ்சாவூர் மாநகராட்சியின் ஆணையரிடம் கோரப்பட்டது.**

3) தஞ்சாவூர் மாநகராட்சி ஆணையர் தனது 10.05.2023 நாளிட்ட அறிக்கையில் கீழ்க்கண்டவாறு தெரிவித்துள்ளார்:

" தஞ்சாவூர் மாநகராட்சிக்குட்பட்ட மருத்துவக்கல்லூரி சாலையையும் வல்லம் சாலையையும் இணைக்கும் ராஜப்பா நகர் சாலையானது South West Extension TP Schemeல் 80 அடி அகல A1 – A1 திட்ட சாலையாக நிலையில் உள்ள சாலையின் கீழ்புறம் உள்ள இடங்களையும் சேர்த்து நகர் ஊரமைப்பு துறையினரால் சாலை விரிவாக்கத்திற்கு உத்தேசித்து வரைபடம் அங்கீகரிக்கப்பட்டுள்ளது. மேற்படி சாலையில் மழைக்காலங்களில் மழைநீர் செல்ல வடிகால் வசதியின்றி சாலையிலேயே மழைநீர் தேங்குவதால் வாகன போக்குவரத்திற்கும், பள்ளி கல்லூரி செல்லும் மாணவ, மாணவியர் நடந்து செல்லவும் மிகவும் சிரமமாக உள்ளது. இதனை கருத்திற்கொண்டு 18வது சீர்மிகு நகர திட்ட மேலாண்மை குழு கூட்டத்தில் மேற்படி சாலையை அபிவிருத்தி செய்து மழைக்காலங்களில் மழைநீர் தேங்காவண்ணம் மழைநீர் வடிகால் அமைக்கவும் தீர்மானிக்கப்பட்டது. அதன்படி சாலையினை அபிவிருத்தி செய்து மழைநீர் வடிகால் கட்டும் பணி நடைபெற்று வருகிறது. தஞ்சாவூர் மாநகராட்சிகள் சட்டம் 2013 பிரிவு 222–ல் " Power to carry wire, pipes, drains, etc. through private property subject to causing as little inconvenience as possible and paying for direct damage" The Commissioner may carry any cable, wire, pipe, drain or channel of any kind to establish or maintain any system of drainage, water supply or lighting, through, across, under or over any road, street or place laid out for a road or street and after giving reasonable notice to the owner or occupier through, across under, over, or up the side of, any land or building in the City and may place and maintain posts, poles, standards, brackets or other contrivances to support cables, pipes, channels, wires and lights on any pole or post in the City not vested in the Government and may do all acts necessary or expedient for repairing or maintaining any such cable, wire, pipe, drain, channel, post, pole, standard, bracket or other similar contrivance in an effective State for the purpose for which it is intended to be used, or for removing the same. Provided that such work shall be done so as to cause the least practicable nuisance or inconvenience to any person.

மேற்படி சாலை மற்றும் மழைநீர் வடிகால் ஏற்படுத்த சீர்மிகு நகர திட்டத்தின் கீழ் மதிப்பீடு தயார் செய்யப்பட்டு மேற்படி பணி 80% க்குமேல் முடிவடைந்த நிலையில் உள்ளது. அதன் ஒரு பகுதியே புல எண்.144ன் ஒரு ஓரமாக உத்தேசிக்கப்பட்டுள்ளது. மனுதாரர் தனது அனுபவத்தில் உள்ளதாக தெரிவிக்கும் கதவு எண்.7, செங்கமல நாச்சியம்மன் கோவில் தெருவில் உள்ள கீற்றுக்கொட்டகையானது பல ஆண்டுகளாக பயன்பாட்டில் இல்லாமலும், மிகவும் சிதிலமடைந்து எந்நேரத்திலும் இடிந்து விழுந்து விடுமோ என அப்பகுதியில் செல்லும் மாணவ மாணவியருக்கும் மற்றும் பொதுமக்களுக்கும் அச்சம் ஏற்படுத்தும் வகையில் இருந்தது. மேற்படி கட்டடம் குறித்து அருகில் இருந்தவர்களிடம் விசாரித்த வகையில் மேற்படி கொட்டகை அனுபவதாரர் எங்குள்ளார் என்றும் தெரியவில்லை என தெரிவித்தார்கள். மேலும், மேற்படி விரிவாக்க பணியானது கடந்த ஒன்றரை வருடங்களுக்கு மேலாக நடைபெற்று வந்தபோதிலும், மேற்படி நபரால் மாநகராட்சிக்கு எவ்விதமான கோரிக்கையும் வைக்கப்படவில்லை. எனவே

மேற்படி அபாயகரமான கூரை வேய்ந்த கட்டடமானது இடித்து அகற்றப்பட்டு மழைநீர் வடிகால் கட்டும் பணி நடைபெற்று வருகிறது. அதற்கான புகைப்படம் இத்துடன் இணைப்பட்டுள்ளது என்பதை பணிவுடன் தெரிவித்துக்கொள்கிறேன்" என தெரிவித்துள்ளார்.

**4) இம்மனு தொடர்பாக மனுதாரர் மற்றும் எதிர்மனுதாரர் ஆகியோரை 11.05.2023 அன்று நேரடி விசாரணைக்கு வருமாறு 04.05.2023 நாளிட்ட அழைப்பாணைகள் அனுப்பப்பட்டன.**

**5) மனுதாரர் 11.05.2023 அன்றைய நேரடி விசாரணையில் ஆஜராகி தனது வாக்குமூலத்தை கீழ்க்கண்டவாறு சமர்ப்பித்துள்ளார்.**

"தஞ்சாவூர் மாநகராட்சி எல்லைக்குட்பட்ட 42வது வார்டு ராஜப்பா நகரில் உள்ள செங்கமலநாச்சியம்மன் கோவில் தெருவில் உள்ள கதவு எண்.7 எனது தந்தை எங்களுக்கு அளித்த கோவில் நிலமாகும். 900 சதுர அடி கொண்ட மேற்கண்ட இடத்தில் மேற்கூரை வேய்ந்து 35 ஆண்டுகளாக குடியிருந்து வருகிறோம். மேற்கண்ட வீட்டிற்கான அறநிலையத்துறைக்கு அடிமனை வரி, மேற்கண்ட வீட்டிற்கான மேற்கூரை வீட்டு வரி, குடிநீர் இணைப்பு கட்டணம், பாதாள சாக்கடை, இணைப்புக் கட்டணம் ஆகியவை 2022–2023 ஆண்டு வரை வரி செலுத்தி உள்ளேன். மேற்கண்ட எனது தந்தையின் பெயரில் உள்ள எனது தந்தையின் வீட்டை மழைநீர் வடிகால் எங்கள் வீட்டின் குறுக்கே செல்வதாகக்கூறி நகராட்சி அலுவலர்கள் எங்களுக்கு எவ்வித முன் அறிவிப்போ அல்லது தகவலோ அளிக்காமல் எங்களது வீட்டை தரைமட்டமாக இடித்து விட்டனர். மாநகராட்சி அலுவலர்களை நேரில் சென்று கேட்டபோது, எனது வீடு மிகவும் பழுதடைந்துள்ளதால் அவ்வீடு இடிக்கப்பட்டுவிட்டது என தெரிவித்துள்ளனர். எவ்வித பழுதும் இல்லாத எங்களது வீட்டை எவ்வித தகவலும் அளிக்காமல் மாநகராட்சியால் இடித்தது தொடர்பாக மாவட்ட ஆட்சியருக்கும் 27.02.2023 அன்று மனு அளித்து, மாவட்ட ஆட்சியரின் அலுவலகத்திலிருந்து ஒப்புதல் அட்டையும் பெறப்பட்டுள்ளது. அவற்றின் நகல்களையும் இந்நேர்வு தொடர்பான புகைப்பட நகல்களையும் இம்முறைமன்றத்தில் சமர்ப்பிக்கிறேன்.

எனவே எவ்வித தகவலும் அளிக்காமல் எனது வீட்டை இடித்து தரைமட்டமாக்கிய மாநகராட்சி அலுவலர்கள் மீது தேவையான நடவடிக்கை எடுத்திட ஆவண செய்யுமாறு இம்முறைமன்றத்தை கேட்டுக்கொள்கிறேன்" என்று தெரிவித்துள்ளதுடன், மேலும் நேரடி விசாரணையின்போது தனது எழுத்துபூர்வமான அறிக்கையினையும் சமர்ப்பித்துள்ளார்.

6) தஞ்சாவூர் மாநகராட்சியின் நகரமைப்பு ஆய்வாளர் **11.05.2023 அன்றைய நேரடி விசாரணையில் ஆஜராகி தனது வாக்குமூலத்தை பின்வருமாறு சமர்ப்பித்துள்ளார் :**

" மனுதாரர் தனது மனுவில் குறிப்பிட்டுள்ள இடம் மற்றும் அங்குள்ள சாலையின் கீழ்புறம் உள்ள இடங்கள் ஆகியவை நகர் ஊரமைப்பு துறையினரால் சாலை விரிவாக்கத்திற்கு உத்தேசித்து வரைபடம் அங்கீகரிக்கப்பட்டுள்ளது. மேற்கண்ட சாலையில் மழைநீர் வடிகால் அமைத்திட தீர்மானிக்கப்பட்டதால், கோவில் நிலத்தில் தஞ்சாவூர் மாநகராட்சி எல்லைக்குட்பட்ட 42வது வார்டு ராஜப்பா நகரில் உள்ள செங்கமலநாச்சியம்மன் கோவில் தெருவில் உள்ள கதவு எண்.7ல் அமைந்துள்ள பல ஆண்டுகளாக பழுதடைந்த மனுதாரரின் வீட்டை மாநகராட்சியால் இடிக்கப்பட்டது. மேற்கண்ட வீட்டை இடிக்கும்போது சம்பந்தப்பட்ட

உரிமையாளருக்கு எவ்வித அறிவிப்பும் மாநகராட்சியால் வழங்கப்படவில்லை. மேலும் மேற்கண்ட வீட்டை இடித்தது குறித்து மனுதாரர் எவ்வித புகார் மனுவையும் மாநகராட்சிக்கு அனுப்பவில்லை என்பதை இம்முறைமன்றத்தில் தெரிவித்துக்கொள்கிறேன்.

இந்நேர்வு தொடர்பாக தஞ்சாவூர் மாநகராட்சி ஆணையரிடமிருந்து, இந்து சமய அறநிலையத்துறை இணை ஆணையருக்கு 06.04.2023 நாளிட்ட கடிதத்தில் " அருள்மிகு செங்கமலநாச்சியம்மன் திருக்கோவிலுக்கு சொந்தமான இடத்தில் மழைநீர் வடிகால் அமைக்கும் பணி உத்தேசிக்கப்பட்டுள்ளது" என தெரிவித்து கடிதம் அனுப்பப்பட்டுள்ளது என்கின்ற விவரத்தை தெரிவித்து அக்கடிதத்தின் நகலினை இம்முறை மன்றத்தில் சமர்ப்பிக்கிறேன். மேலும் மாவட்ட ஆட்சியரின் வாய்மொழி உத்தரவின்பேரிலேயே மேற்கண்ட மனுதாருக்கு சொந்தமான வீடு இடிக்கப்பட்டது எனவும், மாவட்ட ஆட்சியரிடமிருந்து எழுத்துப்பூர்மான உத்தரவு ஏதும் மாநகராட்சியால் பெறப்படவில்லை எனவும் இம்முறைமன்றத்தில் தெரிவித்துக்கொள்கிறேன்" என தெரிவித்துள்ளார்.

மேலும் இம்முறைமன்றத்தில் என்னால் சமர்ப்பிக்கப்படும் தஞ்சாவூர் மாநகராட்சி ஆணையரின் 10.05.2023நாளிட்ட கடிதத்தில் கண்டுள்ள விபரங்களையும் எனது மேல் வாக்குமூலமாக பதிவு செய்துகொள்ளும்படி தெரிவித்து இந்நேர்வு தொடர்பான புகைப்படங்களை இம்முறைமன்றத்தில் சமர்ப்பிக்கிறேன்" என தெரிவித்துள்ளார்.

7) மனுதாரர் தஞ்சாவூர் மாநகராட்சி எல்லைக்குட்பட்ட 42வது வார்டு ராஜப்பா நகரில் உள்ள செங்கமலநாச்சியம்மன் கோவில்தெருவில் உள்ள தங்களது வீடு மாநகராட்சி அலுவலர்களால் இடிக்கப்பட்டது என தனது மனுவில் தெரிவித்துள்ளார்.

தஞ்சாவூர் மாநகராட்சி மனுதாரர் குறிப்பிட்டுள்ள வீடு இருக்கும் சாலையினை அபிவிருத்தி செய்து மழைநீர் வடிகால் கட்டும் பணி தொடர்பாக அந்த வீட்டினை இடித்து தரைமட்டமாக்கிவிட்டனர் இதற்கு ஆணையர் தஞ்சாவூர் மாநகராட்சி சட்டம் 2013 பிரிவு 222ன்படி நடவடிக்கை எடுக்கப்பட்டதாக குறிப்பிட்டுள்ளார். மனுதாரருக்கு எந்தவித முன்னறிவிப்பும் இந்தப்பிரிவின்படி வழங்கப்படவில்லை. மனுதாரர் 2022–2023 –வரை வரிகள் செலுத்தி வந்துள்ளார்.

8) இந்நேர்வில் மனுதாரரின் மனு, வாக்குமூலம், தஞ்சாவூர் மாநகராட்சியின் நகரமைப்பு ஆய்வாளரின் வாக்குமூலம், தஞ்சாவூர் மாநகராட்சி ஆணையரின் அறிக்கை மற்றும் சமர்ப்பிக்கப்பட்ட புகைப்படங்கள் ஆகியவை இம்முறைமன்ற நடுவத்தால் கவனமுடன் பரிசீலிக்கப்பட்டன.

9) மனுதாரர் 35 வருடங்களாக தங்கள் வசம் இருக்கும் செங்கமலநாச்சியம்மன் கோவிலுக்கு பாத்தியப்பட்ட இராஜப்பா நகரில் எண்.7ல், மின்வாரிய இணைப்புடன் உள்ள வீட்டிற்கு கோவிலுக்கு செலுத்த வேண்டிய நிலவரிகளை செலுத்தி, தஞ்சை மாநகராட்சிக்கு வீட்டு வரி, குடிநீர் இணைப்பு வரி, பாதாள சாக்கடை வரி அனைத்தும் 2022–2023 வரை மனுதாரர் செலுத்தி வந்துள்ளார். மனுதாரரின் தந்தை 2019ம் ஆண்டு காலமாகிவிட்டதால் பின்னர் மனுதாரர் திருமதி.ஷோபா பழனிவேலு சுவாதீனத்தில் மேற்படி வீடு இருந்து வந்துள்ளது. மாவட்ட ஆட்சியரின் வாய்மொழி உத்தரவின்பேரிலேயே மேற்கண்ட மனுதாரருக்கு சொந்தமான

வீடு இடிக்கப்பட்டது என தஞ்சாவூர் மாநகராட்சி நகரமைப்பு ஆய்வாளர் தனது வாக்குமூலத்தில் தெரிவித்துள்ளார். இதுதொடர்பாக எழுத்துப்பூர்வமாக எந்தவித முன்னறிவிப்பும் வீட்டின் உரிமையாளரான மனுதாரருக்கு வழங்கியதற்கான ஆதாரத்தை இம்முறைமன்ற நடுவத்தில் அவர் சமர்ப்பிக்கவில்லை. மனுதாரர் மாவட்ட ஆட்சியர் அலுவலக குறைதீர் நாளன்று அதாவது **27.02.2023** அன்று தஞ்சாவூர் மாவட்ட ஆட்சியர் அவர்களுக்கு மனு கொடுத்துள்ளார். அதன் ஒப்புதல் அட்டையின் நகலையும் இம்முறைமன்றத்தில் சமர்ப்பித்துள்ளார். அதில் மற்றவற்றுக்கிடையில் "ஏற்கனவே மழைநீர் வடிகாலுக்காக அளவீடு செய்யப்பட்ட இடத்தினை எடுக்காமல் முழுமையாக இடித்துவிட்டார்கள்" என குறிப்பிட்டுள்ளார். ஆனால் தஞ்சாவூர் மாநகராட்சி ஆணையர் இணை ஆணையர் இந்து சமய அறநிலையத்துறைக்கு அனுப்பிய **06.04.2023** நாளிட்ட கடிதத்தில்தான் மற்றவற்றுக்கிடையில் புல எண் 144ல் ஒரு ஓரமாக பணி செய்திட உத்தேசிக்கப்பட்டுள்ளது என்றும் அந்த இடத்தில் மழைநீர் வடிகால் தரையின் கீழ் அமைக்கப்பட்டுள்ளது என்றும் எனவே மேற்பகுதியை தொடர்ந்து மனுதாரர் பயன்படுத்திக்கொள்ளலாம் எனவும் மனுதாரர் உரிம மாற்றம் தர வேண்டியதில்லை என்றும் திருக்கோவில் வசமே மேற்கண்ட புல உரிமம் தொடரும் எனக்குறிப்பிட்டு திருக்கோவில் நிலத்தின் ஒரு பகுதி மழைநீர் வடிகால் அமைக்க ஒத்துழைப்பு தருமாறு கேட்டுக்கொண்டுள்ளார்.

10) தஞ்சாவூர் இந்து சமய அறநிலையத்துறை இணை ஆணையர் தனது 16.03.2023 நாளிட்ட கடிதத்தில் மழைநீர் வடிகால் பணியை அத்துறையின் முறையான அனுமதி பெறாமல் பணியினை மேற்கொள்ளகூடாது எனவும் இது தொடர்பாக தடங்கல் மனு தஞ்சாவூர் மாநகராட்சிக்கு அளிக்கப்பட்டுள்ளது என தெரிவித்துள்ள நிலையில் தஞ்சாவூர் மாநகராட்சி இவற்றை எதனையும் பொருட்படுத்தாமல் அரசு விதிமுறைகளை கண்டுகொள்ளாமல் தன்னிச்சையாக செயல்பட்டு மனுதாரர் வீட்டினை இடித்துள்ளனர் என்பதை அறிய முடிகிறது.

11) தஞ்சாவூர் மாநகராட்சிகள் சட்டம், 2013 பிரிவு 222–ல் " Power to carry wire, pipes, drains, etc. through private property subject to causing as little inconvenience as possible and paying for direct damage" The Commissioner may carry any cable, wire, pipe, drain or channel of any kind to establish or maintain any system of drainage, water supply or lighting, through, across, under or over any road, **street or place laid out for a road or street and after giving reasonable notice to the owner or occupier through, across under, over, or up the side of, any land or building in the City** and may place and maintain posts, poles, standards, brackets or other contrivances to support cables, pipes, channels, wires and lights on any pole or post in the City not vested in the Government and may do all acts necessary or expedient for repairing or maintaining any such cable, wire, pipe, drain, channel, post, pole, standard, bracket or other similar contrivance in an effective State for the purpose for which it is intended to be used, or for removing the same. **Provided that such work shall be done so as to cause the least practicable nuisance or inconvenience to any person.**

மேற்சொன்ன சட்டப்பிரிவின்படி மனுதாரருக்கு எந்தவிதமான முன்னறிவிப்பும் வழங்காமல் வீட்டினை இடித்துள்ளனர். இதனால் மனுதாரருக்கு பேரிழப்பு ஏற்பட்டு மன உளைச்சல் அடைந்துள்ளார். இது மிகவும் வன்மையாகக்கண்டிக்கத்தக்கது.

2014ஆம் ஆண்டைய தமிழ்நாடு உள்ளாட்சி அமைப்புகள் முறைமன்ற நடுவச்சட்டம் (ம) விதிகளில் இம்முறைமன்றத்திற்கு வழங்கப்பட்டுள்ள அதிகாரங்களின் அடிப்படையில் குறிப்பாக:-

7, The Ombudsman shall perform all or any of the following functions, namely"-
(ii) ( c) Where the irregularity is due to wilful negligence or dereliction of duty of any officer or employee of the local body, recommend for departmental action by the appropriate authority under the relevant rules-ன்படி இந்நேர்வில் சட்டக்கூறுகளை (Provisions of the act) பின்பற்றாமல் செயல்பட்டுள்ள சம்மந்தப்பட்ட தஞ்சாவூர் மாநகராட்சி அலுவலர்கள் மீது ஒழுங்கு நடவடிக்கை மேற்கொள்ள நகராட்சி நிர்வாக இயக்குநருக்கு பரிந்துரைத்து இம்முறைமன்ற நடுவம் ஆணையிடுகிறது. மேலும் இனி வருங்காலங்களில் இதுபோன்று முன் அறிவிப்பு இல்லாமல் சாதாரண மக்களின் வாழ்வாதாரத்தை பாதிக்கக்கூடிய செயல்களை தவிர்க்குமாறு தஞ்சாவூர் மாநகராட்சி ஆணையருக்கு அறிவுரை வழங்கி இம்முறைமன்ற நடுவம் ஆணையிடுகிறது.

This is an instance where the Corporation of Thanjavur under the misguidance and autocratic leadership of the **Commissioner has tresspassed into the property of the petitioner and caused damages without adhering to the provisions of the Act as pointed out in the para 11 above.** It is shocking that the Commissioner is also justifying his act by quoting provisions in the Local Body's favour. The petitioner has been remitting the taxes and prescribed tariff amounts to both the Temple Management and the Corporation including property tax, water tax, etc. When this being so the Thanjavur Corporation has needlessly caused damages to the petitioner's property taking law into its hands without any authority. **The Corporation has not communicated its decision as per section 222 of Thanjavur Municipal Act,2013.** This is sheer abuse of power vested with the Local Body and in the name of laying pipeline, drains etc. The Corporation without following procedure and rules has gone berserk. This only brings bad repute to the image of the Corporation.

The Petitioner has produced photographs of her damaged house with enormous visual clarity and evidence. Besides the JC, HR & CE Thanjavur in his reply dated 16.03.2023 to the Chief Minister's Cell has clearly stated that the Corporation did not obtain prior permission from the HR & CE Department before proceeding with demolition activity which again betrays the Thanjavur Corporation's overreaching excess and violation of such basic natural principles of adherence to legal discipline and compliance with procedural formalities. **It is clearly established that the Commissioner, Thanjavur Corporation has exceeded his limits, run amok without any control and callously indulged in this demolition spree in the name of RWH work citing the powers of the Local Body but defaulting totally in the area of observing rules and regulations of procedure.** The DMA is hence directed to initiate necessary disciplinary action against all the officials concerned including the Commissioner. Just recalling the District Collector's oral instructions to remove the property of the petitioner cannot hold water. Any authority should abide

by the law of the land and hence the contention of the Corporation is rejected. A copy of this Forum's orders is marked to Government in MAWS for information.

2023–ஆம் ஆண்டு மே திங்கள் 27–ஆம் நாள் என்னால் கையொப்பமிடப்பட்டு அலுவலக முத்திரையுடன் இவ்வாணை வெளியிடப்படுகிறது.

//ஒப்பம்//
தமிழ்நாடு உள்ளாட்சி அமைப்புகள் முறைமன்ற நடுவர்

பெறுநர்

1. திருமதி.ஷோபா பழனிவேலு
   எண்.300, இரயில்வே காலனி
   ஈரோடு – 638 002.
2. ஆணையர்,
   தஞ்சாவூர் மாநகராட்சி,
   தஞ்சாவூர்.
3. அரசு கூடுதல் தலைமைச்செயலர்,
   நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கல் துறை,
   தலைமைச்செயலகம்,
   புனித ஜார்ஜ் கோட்டை,
   சென்னை – 600 009.
4. நகராட்சி நிர்வாக இயக்குநர்
   நகராட்சிநிர்வாகஇயக்குநரகம்,
   எண்.75, சாந்தோம் நெடுஞ்சாலை,
   ராஜாஅண்ணாமலைபுரம்,
   சென்னை– 600 028.
5. இணைஇயக்குநர்
   ஒருங்கிணைப்பாளர் (Nodal Officer)
   நகராட்சிநிர்வாகஇயக்குநரகம்,
   எண்.75, சாந்தோம் நெடுஞ்சாலை,
   ராஜாஅண்ணாமலைபுரம்,
   சென்னை– 600 028.

மாண்புமிகு முறைமன்ற நடுவரின் தனிச்செயலர்
இகோ/உதிரிகள்

//ஆணைப்படி/ அனுப்பப்படுகிறது//

உதவி பதிவாளர்